தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 192/மா/2025
நாள் 06.03.2026

P. முர்த்தி,
திருப்பூர் மாவட்டம் --- முறையீட்டு மனுதாரர்

(1) ஆணையர்
திருப்பூர் மாநகராட்சி

(2) ச. ராஜேந்திரன், திருப்பூர் --- எதிர்மனுதாரர்கள்

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், சோமனூர் (வழி), இச்சிப்பட்டி அஞ்சல், தேவராயன்பாளையம், கதவு எண் 1/88 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P.மூர்த்தி என்பவரின் 26.05.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 27.05.2025 அன்று பெறப்பட்டு 192/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், சோமனூர் (வழி), இச்சிப்பட்டி அஞ்சல், தேவராயன்பாளையம், கதவு எண் 1/88 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P.மூர்த்தி என்பவர் தனது 26.05.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"திருப்பூர் மாவட்டம், திருப்பூர் மாநகராட்சி மண்டலம் III (நல்லூர்) வார்டு எண்.48, நல்லூர் ஸ்ரீவிநாயக கோயில் வீதியில் நத்தம் புல எண் 820/6 (பழைய புல எண் 76)–ல், திரு.ராஜேந்திரன் த/பெ.சந்தானம் என்பவர் மேற்கண்ட புல எண்ணில் திருமதி.கௌசல்யா க/பெ.கணேசன் என்பவருக்கு பாத்தியப்பட்ட இடத்தை ஆக்கிரமித்து வீடு கட்டி வருவதோடு மட்டுமல்லாமல்,

மேற்கண்ட கட்டுமானத்திற்கு திருப்பூர் மாநகராட்சியிடம் கட்டிட அனுமதி பெறப்படவில்லை என்பதால், மேற்கண்ட அனுமதியற்ற/அங்கீகாரம் இல்லாத கட்டுமானத்தின் மீது வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அரசாணை நிலை எண்.07, நாள் 10.01.2023–ல் குறித்துரைக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரி,

உயர்திரு. நகராட்சிகள் நிர்வாக இயக்குனர் சென்னை, உயர்திரு. மாநகராட்சி ஆணையாளர் திருப்பூர் மற்றும் உயர்திரு. உதவி ஆணையாளர் மண்டலம் III, திருப்பூர்

மாநகராட்சி ஆகிய அலுவலர்களுக்கு 04.12.2024–ல் புகார் மனு அளிக்கப்பட்டு, 50 நாட்களுக்கு மேலாகியும், மேற்கண்ட புகார் மனுக்கள் மீது திருப்பூர் மாநகராட்சி அலுவலர்களால் யாதொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத காரணத்தால்,

மேற்கண்ட புகார் மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களை தருமாறு தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 கீழ் பிரிவு 6(1)–ன் கீழ் 27.01.2025–ல் மனு செய்த பிறகு,

மேற்கண்ட அனுமதியற்ற கட்டுமான உரிமையாளருக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளதாக உதவி ஆணையாளர், மண்டலம் III அவர்கள் 25.02.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் தெரிவித்து 90 நாட்கள் கடந்து விட்ட பிறகும் கூட மேற்கண்ட அனுமதியற்ற கட்டுமானத்தின் மீது அடுத்த கட்ட தொடர் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளாமல் அனுமதியற்ற கட்டிட உரிமையாளரிடம் பேரம் பேசி அனுமதியற்ற கட்டிடம் தொடர்வதற்கு உள் நோக்கத்தோடு சம்பந்தப்பட்ட ஒரு சில மாநகராட்சி அலுவலர்கள் வழிவகை செய்து கொண்டிருக்கிறார்கள்.

தாங்கள் இப்புகார் மனு மீது விசாரணை மேற்கொண்டு அரசுப் பணியை சரிவர செய்யாமலும் அனுமதியற்ற கட்டுமானம் தொடர்வதற்கு உள் நோக்கத்தோடு வழிவகை செய்தும் கடமை தவறிய குற்றம் இழைத்துள்ள தொடர்புடைய திருப்பூர் மாநகராட்சி அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட அனுமதியற்ற / அங்கீகாரம் இல்லாத சட்ட விரோத கட்டுமானத்தின் மீது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் 10.01.2023ல் வெளியிடப்பட்டுள்ள அரசாணை நிலை எண் 07–ல் வகுத்துரைத்துள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளவும்,

உரிய உத்தரவுகள் வழங்குமாறும் தங்களை பணிவுடன் வேண்டி இப்புகார் மனுவை தங்களிடம் தாழ்மையுடன் தாக்கல் செய்கிறேன்.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 16.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருப்பூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. திருப்பூர் மாநகராட்சி உதவி ஆணையர் தனது கடிதம் ந.க. எண் இ1/5848/2024/ம3 நாள் 30.01.2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"திரு. P.மூர்த்தி என்பவர் 04.12.2024 நாளிட்ட மனுவில், திருப்பூர் மாவட்டம், திருப்பூர் மாநகராட்சி நல்லூர் கிராமம், வார்டு 48, ஸ்ரீ விநாயகா கோவில் நத்தம் புல எண் 820/6–ல் (பழைய எண் 76A) திரு. ராஜேந்திரன் த/பெ சந்தானம் என்பவர் மேற்கண்ட புல எண்ணில் திருமதி கௌசல்யா க/பெ கணேசன் என்பவருக்கு பாத்தியப்பட்ட இடத்தை ஆக்கிரமித்து அனுமதியின்றி கட்டிடம் கட்டி வருவதாக மனு அளித்துள்ளார்.

மேற்கண்ட மனுவின் பேரில் ஆய்வு செய்யப்பட்டதில் ஆக்கிரமிப்பு தொடர்பாக அளவீடு செய்து அறிக்கை பெற வட்டாட்சியர் (தெ) அவர்களுக்கு 13.12.2024 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் அனுமதியின்றி கட்டிடம் கட்டி வருவது தொடர்பாக திரு. ராஜேந்திரன் என்பவருக்கு 27.01.2025 நாளிட்ட அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

28.01.2025 நாளிட்ட மனுவில் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் கீழ் திரு. P.மூர்த்தி என்பவர், திரு. ராஜேந்திரன் த/பெ சந்தானம் அவர்களின் கட்டிட அனுமதி மற்றும் மாநகராட்சி மூலம் வழங்கப்பட்ட அறிவிப்பு நகல் கோரப்பட்டதில் 25.02.2025

நாளிட்ட கடிதத்தில் மனுதாரர் அவர்களுக்கு தகவல் மற்றும் நகல் வழங்கப்பட்டுள்ளது என சமர்ப்பிக்கப்படுகிறது.''

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.02.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 21.01.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 03.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

''திருப்பூர் மாநகராட்சி மண்டலம் III (நல்லூர்) வார்டு எண்.48ல் அமைந்துள்ள நல்லூர் ஸ்ரீவிநாயக கோயில் வீதியில் நத்தம் புல எண் 820/6 (பழைய புல எண் 76)ல், திரு.ராஜேந்திரன், த/பெ.சந்தானம் என்பவர் மேற்கண்ட புல எண்ணில் திருமதி.கௌசல்யா, க/பெ.கணேசன் என்பவருக்கு பாத்தியப்பட்ட இடத்தை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளார். இக்கட்டிட கட்டுமானத்திற்கு திருப்பூர் மாநகராட்சியிடம் அனுமதி பெறவில்லை. மேலும், இக்கட்டிடத்தின் மீது வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அரசாணை நிலை எண்.07, நாள் 10.01.2023ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி நடவடிக்கை எடுக்க கோரி 04.12.2024ல் புகார் மனுக்கள் அளிக்கப்பட்டு இது வரை எந்தவித நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால் 27.01.2025 அன்று தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 கீழ் மனு அளித்தப்பின் கட்டிட உரிமையாளருக்கு தாக்கீது வழங்கப்பட்டதாக திருப்பூர் மாநகராட்சி உதவி ஆணையர் 25.02.2025 நாளிட்ட கடிதத்தில் தகவல் அளித்தார்.

எனவே அனுமதியற்ற கட்டிடத்தின் மீது உரிய சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்க திருப்பூர் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் கடந்த ஓராண்டு காலமாக எந்த ஒரு மேல் நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் உள்நோக்கத்துடனும், மெத்தனமாக செயல்பட்ட திருப்பூர் மாநகராட்சி அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிந்துக் கேட்டுக்கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் திருப்பூர் மாநகராட்சி உதவி ஆணையாளர் 03.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

''திருப்பூர் மாவட்டம், திருப்பூர் மாநகராட்சி, நல்லூர் கிராமம், வார்டு 48, ஸ்ரீவிநாயகா கோவில் நத்தம் புல எண் 820/6–ல் (பழைய எண் 76A) திரு. ச. ராஜேந்திரன், த/பெ சந்தானம் என்பவர் மேற்கண்ட புல எண்ணில் திருமதி கௌசல்யா, க/பெ கணேசன் என்பவருக்கு பாத்தியப்பட்ட இடத்தை ஆக்கிரமித்து அனுமதியின்றி கட்டிடம் கட்டியது தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டதில் ஆக்கிரமிப்பு தொடர்பாக அளவீடு செய்து அறிக்கை அனுப்புமாறு வட்டாட்சியர் (தெ) அவர்களுக்கு 13.12.2024 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அனுமதியின்றி கட்டிடம் கட்டி வருவது தொடர்பாக திரு. ராஜேந்திரன் என்பவருக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 133, 134, 135(1,2) மற்றும் 135 (6) பிரிவுகளின் கீழ் 27.01.2025 அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது இந்த தாக்கீதுகளின் நகல்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கின்றேன். மேலும் மேற்படி கட்டிடத்திற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

7. இரண்டாம் எதிர்மனுதாரரான திரு. ச. ராஜேந்திரன் என்பவர் 03.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

8. மனுதாரரின் மனு, வாக்குமூலம், திருப்பூர் மாநகராட்சி உதவி ஆணையாளரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் வாக்குமூலத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

திருப்பூர் மாநகராட்சி மண்டலம் III (நல்லூர்) வார்டு எண்.48ல் அமைந்துள்ள நல்லூர் ஸ்ரீவிநாயகா கோயில் வீதியில் நத்தம் புல எண் 820/6 (பழைய புல எண் 76)ல், திரு.ராஜேந்திரன், த/பெ.சந்தானம் என்பவர் மேற்கண்ட புல எண்ணில் திருமதி.கௌசல்யா, க/பெ.கணேசன் என்பவருக்கு பாத்தியப்பட்ட இடத்தை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ள கட்டுமானத்திற்கு திருப்பூர் மாநகராட்சியிடம் அனுமதி பெறவில்லை என்பதும், இக்கட்டிடத்தின் மீது வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அரசாணை நிலை எண்.07, நாள் 10.01.2023ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி நடவடிக்கை எடுக்க கோரி புகார் மனுக்கள் அளிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும், 27.01.2025 அன்று தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005–ன்கீழ் மனு அளித்தப்பின் கட்டிட உரிமையாளருக்கு தாக்கீது வழங்கப்பட்டதாக திருப்பூர் மாநகராட்சியால் தகவல் அளிக்கப்பட்டது என்பதும், அனுமதியற்ற கட்டிடத்தின் மீது உரிய சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்க திருப்பூர் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறும், கடந்த ஓராண்டு காலமாக எந்த ஒரு மேல் நடவடிக்கையும் மேற்கொள்ளாத திருப்பூர் மாநகராட்சி அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் மாநகராட்சி, நல்லூர் கிராமம், வார்டு 48, ஸ்ரீவிநாயகா கோவில் நத்தம் புல எண் 820/6–ல் (பழைய எண் 76A) திரு ச. ராஜேந்திரன், த/பெ சந்தானம் என்பவர் மேற்கண்ட புல எண்ணில் திருமதி கௌசல்யா, க/பெ கணேசன் என்பவருக்கு பாத்தியப்பட்ட இடத்தை ஆக்கிரமித்து அனுமதியின்றி கட்டிடம் கட்டியது தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டு, ஆக்கிரமிப்பு தொடர்பாக அளவீடு செய்து அறிக்கை அனுப்புமாறு வட்டாட்சியர் (தெ)–க்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், அனுமதியின்றி கட்டிடம் கட்டி வருவது தொடர்பாக திரு. ராஜேந்திரன் என்பவருக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 133, 134, 135 (1), (2) மற்றும் 135 (6) பிரிவுகளின் கீழ் 27.01.2025 தாக்கீது வழங்கப்பட்டு, மேற்கண்டு கட்டிடத்திற்கு தொடர் நடவடிக்கை திருப்பூர் மாநகராட்சியால் எடுக்கப்படும் என்பதும், திருப்பூர் மாநகராட்சி உதவி ஆணையாளரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் அத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட தாக்கீதுகளின் நகல்கள் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரரின் புகார் குறித்து கடந்த ஓராண்டு காலமாக நடவடிக்கை மேற்கொள்ளாமல் காலம் தாழ்த்தி நடவடிக்கை மேற்கொண்ட திருப்பூர் மாநகராட்சி அலுவலர்களின் செயலினை இம்முறைமன்ற நடுவம் கடுமையாக கண்டிக்கிறது. மேலும், திருப்பூர் மாவட்டம், திருப்பூர் மாநகராட்சி, நல்லூர் கிராமம், வார்டு 48, ஸ்ரீவிநாயகா கோவில் நத்தம் புல எண் 820/6–ல் (பழைய எண் 76A) திரு ச. ராஜேந்திரன், த/பெ சந்தானம் என்பவர் மேற்கண்ட புல எண்ணில் அனுமதியின்றி கட்டிடம் கட்டி வருவது தொடர்பாக திரு. ராஜேந்திரன் என்பவருக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 133, 134, 135 (1), (2) மற்றும் 135 (6) பிரிவுகளின் கீழ் 27.01.2025 தாக்கீது வழங்கப்பட்டு, தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என

திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, உரிய நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளுமாறு திருப்பூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 06–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. P. மூர்த்தி,
கதவு எண் 1/88,
தேவராயன்பாளையம்,
இச்சிப்பட்டி போஸ்ட், பல்லடம் தாலுகா,
திருப்பூர் மாவட்டம்–641 668.

(2) திரு. ச. ராஜேந்திரன்,
த/பெ சந்தானம்,
புல எண், 820/6, வார்டு எண் 48,
நல்லூர் ஸ்ரீவிநாயகா கோவில் தெரு,
நல்லூர், திருப்பூர்–641 606.

(3) ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர்.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ./உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.